# பிள்ளைகளின் பாதுகாப்பு பற்றிய சுற்றறிக்கை

## உங்கள் பிள்ளைகளை பாதுகாப்பாக வைத்தல்

வீடுகளில் ஏற்படும் சிறு விபத்துகள் பொதுவாக அடிக்கடி நடைபெறுவதும் தடுக்கவும் தவிர்க்கப்படக் கூடியதுமாகும். இவை பிள்ளைகளை காயப்படுத்தவும் கூடும். சமுதாயத்தினால் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்களையும் தடுக்க முடியும்.

பிள்ளைகள் எப்போதும் ஆவலுள்ளவர்கள். ஏற்படக்கூடிய ஆபத்துகளைக் கவனமாகக் கண்காணித்தால் பிள்ளைகள் காயப்படாது தவிர்ககலாம்.

இந்த சுற்றறிக்கையில் உங்கள் பிள்ளைகளை வீட்டில், வாகனத்தில், சுற்றாடல் என்பவற்றில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள சில எளிமையான குறிப்புகள் அடங்கியுள்ளது.

### குழந்தைகள்

- குழந்தைகளை மல்லாக்கப் படுக்கப்போடுங்கள்.
- பெரியவர்களின் கட்டில்களிலோ மென்மையான விரிப்புகளிலோ குழந்தைகளைப் படுககப்போடவேண்டாம்.
- குழந்தை படுக்கையில் தொட்டிலின் இருபக்கங்களையும் உயர்த்தி (கைக்குழந்தையாக இருப்பினும்) வைக்கவும்.
- விளையாட்டுப் பொருட்களை தொட்டிலிலோ விளையாடும் இடத்திலோ நாடாக்களினால் கட்டி வைக்க வேண்டாம், ஏனெனில் அவற்றால் பிள்ளைகளின் கழுத்து சுருக்குப் படலாம்.
- சூப்பியை கழுத்தில் கட்டி விட வேண்டாம்.
- பிள்ளைகளின் சத்தத்தைக் கண்காணிக்கும் கருவியைப் பாவிப்பது பற்றி ஆலோசியுங்கள். பிள்ளை அழும்போது அதை உங்களுக்கு உணர்த்தும்.

### சிறுவர்கள்

வீட்டின் மூலை முடுக்குகளையெல்லாம் உங்கள் பிள்ளைகளின் நிலையில் உங்களை வைத்துப் பாருங்கள். முழங்கால்களால் தவழ்ந்து ஆபத்து ஏற்படுத்தக்கூடிய எல்லாவற்றையும் தேடிப் பொறுக்குங்கள்.

- தீங்கு ஏற்படுத்தக்கூடிய பொருட்களுள்ள லாச்சிகளுக்கும், அலுமாரிகளுக்கும் பிள்ளைகள் திறக்க முடியாத அடைப்புகளைப் போடுங்கள்.
- மின்சார இணைப்புகள் உள்ள துவாரங்களை பிளாஸ்திரி மூடிகளால் மூடினால் விரல்களையோ வேறு பொருட்களையோ உள்ளே திணிக்க முடியாது.
- பாவிக்காத மின்சார இணைப்புகளை அகற்றவும்.
- மின்சார இணைப்புத் துவாரங்கள் உள்ள இடங்களில் ஒரு பெரிய பொருளையோ அல்லது கதிரையையோ போட்டு மறைக்கவும்.
- கூர்மையான ஓரங்கள் உள்ள மேசைகள் அல்லது பாவியாத தளபாடங்களை பிள்ளைகள் வளரும் வரை பாவியாது ஒதுக்கி வைக்கவும்.
- திரைச்சீலையின் நாடாக்களை பிள்ளைகளின் கைக்கு எட்டாதவாறு உயர்த்திக் கட்டவும்.
- குளிர்காயும் (fireplace) இடத்தை மூடி வைக்கவும.
- மாடிப்படிகளில் தடைகளைப் போட்டு விழாது தடுக்கலாம்.
- உடையக்கூடிய சிறு பொருட்களை பிள்ளைகளின் கைக்கு எட்டாதவாறு வைக்கவும்.
- விளையாட்டுப் பொருட்களின் ஓரங்கள் கூர்மையாக உள்ளதா, குத்தக்கூடிய உடைந்த பகுதிகள் உண்டா என்று பார்க்கவும்.

- விளையாட்டுப் பொருட்களின் லேபல்களை வாசித்து அவை ஆபத்தற்றவையா, அவர்களின் வயதுக்குரியதா எனபவற்றைப் பரிசீலிக்கவும்.
- குடிவகை, சலவைத்துாள், திராவகங்கள், சவரக்கத்திகள், நெருப்பெட்டி, மருந்துவகை போன்றவற்றை கைக்கு எட்டாதவாறு லாச்சிகளில் வைக்கவும்.
- பிளாஸ்டிக் பைகள், காசுப்பைகள், பொத்தான்கள், சிறு கடலைவகை, கடினமான இனிப்புவகை, சில்லறைக்காசுகள் போன்ற சிறு பொருட்களை எட்டாதவாறு வைக்கவும்.
- உங்கள் பிள்ளை ஏதும் நஞ்சுத்தன்மையுடைய பொருளையோ அல்லது ஊறு விளைவிக்கக்கூடிய பொருளையோ விழுங்கி விட்டதாக சந்தேகிப்பின் பயிற்றப்பட்ட ஒரு மருத்துவ அதிகாரியை அழைக்கவும்.
- நெருப்பு எரியும் பட்சத்தில் புகை உட்புகாதவாறு படுக்கும் போது அறைக் கதவுகளை மூடி வைக்கவும்.
- உங்கள் பிள்ளை குளியலறைக்குப் போகும்போது கூட இருக்கவும்.
- விளையாட்டுப் பொருட்கள், தளபாடங்கள், சுவர், எனபவற்றில் காரீயம் கலக்காத வர்ணம் அடிக்கப் பட்டுள்ளதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.
- சுடும் என்ற சொல்லை ஆரம்பத்திலேயே பழக்குங்கள். சுடும் மின் அடுப்பு, இஸ்திரிப்பெட்டி, குளிர்காயும் இடம், விறகடுப்பு, சிகரட், சிகரட் லைட்டர், சுடுபானம் ஆகியவற்றிலிருந்து பிள்ளைகளை விலக்கி வைக்கவும்.
- சமைக்கும் போது பாத்திரங்களின் கைப்பிடிகளை உட் பக்கமாகத் திருப்பி வைக்கவும்.
- மின்சார பொருட்களின் வயர்களை அடுப்புகளுக்கு மேலாகவோ, சமையலறை மேசைகளுக்கு மேலாகவோ தொங்க விட வேண்டாம்.
- சிறுபிள்ளை இழுக்கும் என்று காணும் பட்சத்தில் மேசை விரிப்புகளை நாலாபக்கமும் தொங்கும் படியாகப் போட வேண்டாம்.

வாகனத்தினுள்ளே

- எச்சந்தர்ப்பத்திலும் பிள்ளையை வாகனத்தினுள் தனியாக விட வேண்டாம்.
- எப்பொழுதும் பிள்ளையின் நிறைக்கேற்ப வாகன இருக்கையை பாவிக்கவும். இருக்கையை வாகனத்தில் பாவிக்கமுன் அதன் தயாரிப்பு விளக்கத்தை வாசிக்கவும்.
- வயது கூடிய பிள்ளைக்கு அதன் நிறைக்கேற்ப சிபாரிசு செய்யப்பட்ட இருக்கையை பாவிக்கவும்.
- 12 வயதுக்குட்ட பிள்ளைகள் பின் இருக்கைகளில் இருந்து பயணம் செய்வது நல்லது ஏனெனில் முன்பக்கமுள்ள காற்றுப்பைகள் ஊதினால் ஊறு விளைவிக்கவோ, மரணம் ஏற்படவோ கூடும்.
- வாகனத்தில் போகும் போது பிள்ளைகள இன்னொருவருடைய மடியில் இருக்கவோ, இருக்கை பட்டியை பகிர்ந்து போட்டுக் கொள்ளவோ விடக்கூடாது.

## உபயோகமுள்ள இன்னமும் சில கருத்துக்கள்

- தீ அணைக்கும் சிறு கருவியை ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும்.
- வாயு, புகை என்பவை வெளியேறின் அதை கண்டு பிடிக்கும் கருவி வீட்டில் இருப்பது மட்டுமன்றி அது முறையாக வேலை செய்கின்றதா என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.
- பிள்ளைகளின் உடைகள், சால்வைகள், தொப்பிகள் ஆகியவற்றிலுள்ள நாடாக்கள் விளையாட்டிடத்திலுள்ள பொருட்களில் சிக்காது நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.
- நீச்சல்குளங்கள், குட்டைகள், கால்வாய்கள் அருகே தனியாகப் பிள்ளைகளை விடக்கூடாது. நீர் தொட்டிகளிலுள்ள நீரை பாவியாத பட்சத்தில் வெறுமையாக்கியும், குளியல் தொட்டிகளையும், சுடுநீர் தொட்டிகளையும் மூடியும் வைக்கலாம்.
- நாய்கள் சில வேளைகளில் மூர்க்கமாக நடந்து கொள்ளுமாகையால் அவை இருக்குமிடங்களில் பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும்.
- உங்கள் பிள்ளைகளை கண்காணிப்பவரிடம் எல்லாவித அவசரகால தொலைபேசி இலக்கங்களும் உண்டா என்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## ஆயத்தமாக இருத்தல்

பிள்ளைகளுக்கு அவசரகால சிகிச்சை பயிற்சி (CPR) அளிப்பதைப் பற்றி சிந்திக்கவும்.